

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (4.8.2023) முகாம் அலுவலகத்தில், ஓய்வு பெற்ற காவல்துறை இயக்குநர் ப. கந்தசாமி, சென்னையிலுள்ள இந்திய தொழில்நுட்பக் கழகத்தில் (IIT) மேலாண்மை ஆய்வுத் துறையில் பேராசிரியராக பணிநியமனம் பெற்றதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

## மணிப்பூரில் மாணவர்கள் படிப்பு பாதிப்பு!


புதுடெல்லி, ஆக. 6 -

மணிப்பூர் வன்முறைச் சம்பவம் காரணமாக, 14 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களின் படிப்பு பாதிக்கப்பட்டுள்ளது என்று, ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

மாநிலங்களவையில் திரிணாமுல் காங்கிரஸ் உறுப்பினர் டோலா சென் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய கல்வித் துறை இணை அமைச்சர் அன்னப்பூர்ணா தேவி எழுத்துப் பூர்வமாக பதில் அளித்துள்ளார்.

அதில், மணிப்பூர் வன்முறை காரணமாக, 14 ஆயிரத்து 763 மாணவர்கள் இடம் பெயர்ந்துள்ளதாக தெரிவித்தார்.

முகாம்களில் உள்ள பள்ளி மாணவர்களில் சுமார் 93 சதவீதம் பேர் அவர்கள் தங்கியுள்ள இடத்துக்கு அருகில் உள்ள பள்ளிகளில் சேர்ந்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.



முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, சென்னை அருகே அதிநவீன திரைப்பட நகரம் அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் அமைக்கப்படும் என 2023–2024ஆம் ஆண்டிற்கான செய்தித் துறை மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவ்அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக இடம் தேர்வு செய்யும் பொருட்டு திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டம், குத்தம்பாக்கம் ஊராட்சி பகுதியில் நேற்று முன்தினம் (04.08.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் முதலமைச்சரின் செயலாளர் முனைவர்.எம்.எஸ். சண்முகம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மரு.இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ், பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, மாவட்ட வருவாய் அலுவலர் சு.அசோகன், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு) திருமதி.சாந்தி, கூடுதல் இயக்குநர் (பொ) இணை இயக்குநர் (நினைவகம்) தமிழ் செல்வராஜன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் ராஜவேல், பூவிருந்தவல்லி வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், நில அளவை ஆய்வாளர்கள் மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் உள்ளனர்.

### ஈரோடு தெற்கு மாவட்டம் முழுவதும்

# முத்தமிழறிஞர் கலைஞர் 5ஆம் ஆண்டு நினைவுநாள் நினைவேந்தல்!

## மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் சு.முத்துசாமி அறிக்கை!

ஈரோடு, ஆக.6-

ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சு.முத்துசாமி அறிக்கை விடுத்துள்ள வருமாறு:



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5ம் ஆண்டு நினைவுநாளையொட்டி நாளை (7.8.2023 திங்கட்கிழமை )ஈரோடு தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஈரோடு மாநகரம், பகுதி, வார்டுகள் மற்றும் ஒன்றியங்கள், பேரூர், பேரூர் வார்டுகள், ஊர் கிளை ஆகிய அனைத்து இடங்களிலும் கழக நிர்வாகிகள், துணை அமைப்புகளின் நிர்வாகிகள், ஊராட்சி கூட்டுறவு சங்க பிரதிநிதிகள் மற்றும் கழக தோழர்கள் அனைவரும் கீழ்க்கண்டவாறு நினைவேந்தல் நிகழ்ச்சியில் இணைந்து ஏற்பாடு செய்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படம் வைத்து மாலை அணிவிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

காலை 9.00 மணிக்கு ஈரோடு மாநகரம் பன்னீர் செல்வம் பூங்காவில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாவட்ட அவைத் தலைவர் கே.குமார்முருகேஷ், பகுதிக் கழகச் செயலாளர் பொ.ராமச்சந்திரன் தலைமையிலும்

காலை 9.15 மணிக்கு ஈரோடு மாநகரம் முனிசிபல் காலனியில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம், பகுதி கழக செயலாளர் பொ.ராமச்சந்திரன் தலைமையிலும்

காலை 8.00 மணிக்கு சூரியம்பாளையம் பகுதியில் சூரியம்பாளையம் பகுதி மற்றும் வார்டுகள் பகுதி கழக செயலாளர் எஸ்.குமாரவடிவேல் மற்றும் வார்டு செயலாளர்கள் தலைமையிலும்

காலை 8.00 மணிக்கு வீரப்பன் சத்திரம் பகுதியில் வீரப்பன் சத்திரம் பகுதி மற்றும் வார்டுகள் பகுதி கழக செயலாளர் வி.சி.நடராஜன் மற்றும் வார்டு செயலாளர்கள் தலைமையிலும்

காலை 8.00 மணிக்கு பெரியசேமூர் பகுதியில் பெரியசேமூர் பகுதி மற்றும் வார்டுகள் பகுதி கழக செயலாளர் வி.செல்வராஜ் மற்றும் வார்டு செயலாளர்கள் தலைமையிலும்

காலை 8.00 மணிக்கு சூரம்பட்டி பகுதியில் சூரம்பட்டி பகுதி மற்றும் வார்டுகள் பகுதி கழக செயலாளர் வில்லரசம்பட்டி முருகேசன் மற்றும் வார்டு செயலாளர்கள் தலைமையிலும்

காலை 8.00 மணிக்கு பெரியார்நகர் பகுதியில் பெரியார்நகர் பகுதி மற்றும் வார்டுகள் பகுதி கழக செயலாளர் அக்னிடி.சந்திரசேகர் மற்றும் வார்டு செயலாளர்கள் தலைமையிலும்

காலை 8.00 மணிக்கு கொல்லம்பாளையம் பகுதியில் கொல்லம்பாளையம் பகுதி மற்றும் வார்டுகள் பகுதி கழக செயலாளர் கா.லட்சுமணகுமார் மற்றும் வார்டு செயலாளர்கள் தலைமையிலும்

காலை 8.00 மணிக்கு கருங்கல்பாளையம் பகுதியில் கருங்கல்பாளையம் பகுதி மற்றும் வார்டுகள் பகுதி கழக செயலாளர் குறிஞ்சி என்.தண்டபாணி மற்றும் வார்டு செயலாளர்கள் தலைமையிலும்

காலை 8.00 மணிக்கு கொடுமுடி வடக்கு ஒன்றியம் கொடுமுடி ஒன்றியம், பேரூர், பேரூர் வார்டுகள், ஊர்கிளைகள் ஒன்றிய செயலாளர் மு.சின்னுசாமி, பேரூர் செயலாளர், பேரூர் வார்டு செயலாளர் மற்றும் ஊர்கிளை செயலாளர்கள் தலைமையிலும்

காலை 8.00 மணிக்கு கொடுமுடி மேற்கு ஒன்றியம் சிவகிரி ஒன்றியம், பேரூர், பேரூர் வார்டுகள், ஊர்கிளைகள் ஒன்றிய செயலாளர் பா.நடராசன் பேரூர் செயலாளர், பேரூர் வார்டு செயலாளர் மற்றும் ஊர்கிளை செயலாளர்கள் தலைமையிலும்

காலை 8.00 மணிக்கு மொடக்குறிச்சி கிழக்கு ஒன்றியம் மொடக்குறிச்சி ஒன்றியம், பேரூர், பேரூர் வார்டுகள், ஊர்கிளைகள் ஒன்றிய செயலாளர் வி. கதிர்வேல் பேரூர் செயலாளர், பேரூர் வார்டு செயலாளர் மற்றும் ஊர்கிளை செயலாளர்கள் தலைமையிலும்

காலை 8.00 மணிக்கு மொடக்குறிச்சி மேற்கு ஒன்றியம் அவல்பூந்துறை ஒன்றியம், பேரூர், பேரூர வார்டுகள், ஊர்கிளைகள் ஒன்றிய செயலாளர் சு.குணசேகரன் பேரூர் செயலாளர், பேரூர் வார்டு செயலாளர் மற்றும் ஊர்கிளை செயலாளர்கள் தலைமையிலும்

காலை 8.00 மணிக்கு மொடக்குறிச்சி தெற்கு ஒன்றியம் அரச்சலூர் ஒன்றியம், பேரூர், பேரூர வார்டுகள், ஊர்கிளைகள் ஒன்றிய செயலாளர் ஆர்.விஜயகுமார் பேரூர் செயலாளர், பேரூர் வார்டு செயலாளர் மற்றும் ஊர்கிளை செயலாளர்கள் தலைமையிலும்

காலை 8.00 மணிக்கு சென்னிமலை ஒன்றியம் வெள்ளோடு ஒன்றியம், ஊர்கிளைகள் ஒன்றிய செயலாளர் பி.செங்கோட்டையன் மற்றும் ஊர்கிளை செயலாளர்கள் தலைமையிலும்

காலை 8.00 மணிக்கு ஈரோடு ஒன்றியம் ஈரோடு ஒன்றியம், பேரூர், பேரூர் வார்டுகள், ஊர்கிளைகள் ஒன்றிய செயலாளர் தோப்பு டி.சதாசிவம் பேரூர் செயலாளர், பேரூர் வார்டு செயலாளர் மற்றும் ஊர்கிளை செயலாளர்கள் தலைமையிலும்

காலை 8.00 மணிக்கு பெருந்துறை தெற்கு ஒன்றியம் பெருந்துறை ஒன்றியம், பேரூர், பேரூர் வார்டுகள், ஊர்கிளைகள் ஒன்றிய செயலாளர் கே.பி.சாமி பேரூர் செயலாளர், பேரூர் வார்டு செயலாளர் மற்றும் ஊர்கிளை செயலாளர்கள் தலைமையிலும்

காலை 8.00 மணிக்கு பெருந்துறை கிழக்கு ஒன்றியம் காஞ்சிகோயில் ஒன்றியம், பேரூர், பேரூர் வார்டுகள், ஊர்கிளைகள் ஒன்றிய செயலாளர் சி.பெரியசாமி பேரூர் செயலாளர், பேரூர் வார்டு செயலாளர் மற்றும் ஊர்கிளை செயலாளர்கள் தலைமையிலும்

காலை 8.00 மணிக்கு பெருந்துறை வடக்கு ஒன்றியம் திங்களூர் ஒன்றியம், பேரூர், பேரூர் வார்டுகள், ஊர்கிளைகள் ஒன்றிய செயலாளர் பி.சின்னசாமி பேரூர் செயலாளர், பேரூர் வார்டு செயலாளர் மற்றும் ஊர்கிளை செயலாளர்கள் தலைமையிலும்

காலை 8.00 மணிக்கு ஊத்துக்குளி தெற்கு ஒன்றியம் ஊத்துக்குளி ஒன்றியம், பேரூர், பேரூர் வார்டுகள், ஊர்கிளைகள் ஒன்றிய செயலாளர் பி.பி.ஈஸ்வரமூர்த்தி பேரூர் செயலாளர், பேரூர் வார்டு செயலாளர் மற்றும் ஊர்கிளை செயலாளர்கள் தலைமையிலும்

காலை 8.00 மணிக்கு ஊத்துக்குளி வடக்கு ஒன்றியம் குன்னத்தூர் ஒன்றியம், பேரூர், பேரூர் வார்டுகள், ஊர்கிளைகள் ஒன்றிய செயலாளர் எஸ்.சுப்பிரமணியம் பேரூர் செயலாளர், பேரூர் வார்டு செயலாளர் மற்றும் ஊர்கிளை செயலாளர்கள் தலைமையிலும்

காலை 8.00 மணிக்கு ஊத்துக்குளி மத்திய ஒன்றியம் நடுப்பட்டி ஒன்றியம், ஊர்கிளைகள் ஒன்றிய செயலாளர் வி.ராஜா மற்றும் ஊர்கிளை செயலாளர்கள் தலைமையிலும் நடைபெற உள்ளது.

ஈரோடு தெற்கு மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு ஊர்கிளை கழக நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், துணை அமைப்புகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி, கூட்டுறவு சங்க பிரதிநிதிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சியில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயலாளரும் அமைச்சருமான சு.முத்துசாமி தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள்! தருமபுரி மேற்கு மாவட்டக் கழகத்தினர்

# கலைஞர் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலரஞ்சலி!

## மாவட்டச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் வேண்டுகோள்!

தருமபுரி, ஆக. 6-

தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க.வினர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளில் அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திடுவீர்! என மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நாளை (07.08.2023 திங்கட்கிழமை) தருமபுரி மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றியம், பேரூர், கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் மற்றும் கழகத் தொண்டர்கள் அந்தந்தப் பகுதிகளில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்த வேண்டுகிறேன்.

இவ்வாறு மாவட்ட கழக செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் தெரிவித்துள்ளார்.



நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் நடைபெற்ற வல்வில் ஓரி விழாவில் 437 பயனாளிகளுக்கு ரூ.3.20 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளையும், வில்வித்தை போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு, கலைநிகழ்ச்சிகள் நடத்திய கலைகுழுவினர் மற்றும் மாணவ, மாணவியர்களுக்கு, சிறந்த அரங்கங்கள் அமைத்த அரசு துறையினருக்கு சான்றிதழ் மற்றும் கேடயங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கு.பொன்னுசாமி ஆகியோர் வழங்கினர்.

### காவலர்களின் குழந்தைகளுக்கு வழங்கப்படும்

# சிறப்பு கல்வி உதவித்தொகை – கல்வி பரிசுத்தொகை உயர்வு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஆக.6-

காவலர்களின் குழந்தைகளுக்கு வழங்கப்படும் சிறப்பு கல்வி உதவித்தொகை மற்றும் கல்விப் பரிசுத்தொகையை உயர்த்தி வழங்குவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:-

காவலர்களின் குழந்தைகளுக்கு சிறப்பு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் மூலம் தற்போது 100 மாணவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் வீதம் 4 வருடங்களுக்கு வழங்கப்படுவது, எண்ணிக்கை உயர்த்தப்பட்டு 200 மாணவர்களுக்கு 30 ஆயிரம் ரூபாய் வீதம் வழங்கப்படும் என்றும், காவலர்களின் குழந்தைகளுக்கு கல்விப் பரிசுகள் வழங்கும் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் பரிசுத் தொகை இரட்டிப்பாக்கப்படும் என்றும் 2023-24-ஆம் ஆண்டிற்கான காவல்துறை மானியக் கோரிக்கையின் போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், காவலர்களின் குடும்பத்தைச் சார்ந்த 200 மாணவர்களுக்கு தலா 30 ஆயிரம் ரூபாய் வீதம் 4 வருடங்களுக்கு மொத்தம் ரூ.2.4 கோடியில் சிறப்பு கல்வி உதவித் தொகை வழங்கிடவும், மேலும், 37 காவல் மாவட்டங்கள் மற்றும் 9 காவல் ஆணையரகங்களில் பணிபுரியும் காவலர்களின் குழந்தைகளுக்கு கல்விப் பரிசுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் முறையே முதல் பத்து இடங்களைப் பெறும் 460 மாணவ, மாணவியர்களுக்கு தற்போது வழங்கப்படும் மொத்த கல்விப் பரிசுத்தொகையை ரூ.28,29,000/ல் இருந்து ரூ.56,58,000/ஆக இரட்டிப்பாக்கி கல்விப்பரிசுகள் வழங்கவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

உயர்த்தப்பட்ட சிறப்பு கல்வி உதவித்தொகை மற்றும் கல்விப்பரிசுகள் வழங்குவதால் ஏற்படும் கூடுதல் செலவினத்திற்காக, தமிழ்நாடு காவலர் நல நிதிக்கு அரசால் தற்போது வழங்கப்பட்டு வரும் மானியத் தொகையினை ரூ.1.2 கோடியிலிருந்து ரூ.2,96,58,000/ ஆக உயர்த்தியும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இவ்வாறு தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

# கோவை மாநகர் சிங்காநல்லூரில் பொதுக்கூட்டம் - 1000 பேருக்கு நலஉதவிகள் வழங்கல்!

## மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் – கரூர் முரளி சிறப்புரை!

கோவை, ஆக. 6-

முத்தமிழ் அறிஞர், செம்மொழி காவலர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, 04.08.2023 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணியளவில், SIHS காலனி , BRIDGE WOOD பள்ளி அருகில், கோவை மாநகர் மாவட்டம் ,சிங்காநல்லூர் பகுதி1, 55 வது வட்ட கழக தி.மு.க. சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக் கூட்டம் மற்றும் பொதுமக்கள் 1000 பேருக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், மாநில கழக கொள்கை விளக்க அணி துணைச் செயலாளர் கரூர் முரளி. கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா. கார்த்திக் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றி னார்கள்.

பின்னர் கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக் பொதுமக்கள் 1000 பேருக்கு புடவைகள், வெட் கிரைண்டர் உள்ளிட்ட பல்வேறு நலத் திட்ட உதவிகளை வழங்கினார். கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா. கார்த்திக், LPF தொழிற் சங்கக் கொடியை ஏற்றி வைத்து,LPF கட்டுமானம் அமைப்புசாரா தொழிற் சங்க பெயர்ப் பலகையைத் திறந்து வைத்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு,மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

சிங்காநல்லூர் - 1 பகுதிக் கழக துணைச்செயலாளர் கஸ்தூரி அருண் தலைமையில், சிங்காநல்லூர் - 1 பகுதிக் கழக செயலாளர் எஸ். எம்.சாமி வரவேற்புரையில், பொதுக்குழு உறுப்பினர் வெ.சசிகுமார், 55 ஆவது வார்டு செயலாளர் நா. ராஜேந்திரன் ,பகுதிக் கழக அவைத் தலைவர் சின்னசாமி , க.வெங்கடேஸ்வரன், மருதாசலம், பாபு பூவிந்தன், சி. எம். வேலுமணி, தம்பு(எ) சுந்தர்ராஜ், துரை(எ)ஈஸ்வரன், ஆர்.சுப்பிரமணியம்,ஆர்.சச்சிதானந்தம்ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது,

இக்கூட்டத்தில் மாநகர் மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ்,தளபதி இளங்கோ, கல்பனா செந்தில், தலைமை செயற்குழு உறுப்பினர் வே. பாலசுப்பிரமணியன், மாநில நிர்வாகிகள் தீர்மானக்குழு இணைச் செயலாளர் பி.நாச்சிமுத்து, மாணவரணி துணைச் செயலாளர் வி.ஜி. கோகுல், தலைமைக் கழகப் பேச்சாளர் சிங்கை சௌந்தர், மாநகர் மாவட்ட அணி அமைப்பாளர்கள் இளைஞரணி அமைப்பாளர் R.தனபால், பொறியாளர் அணி அமைப்பாளர் நா.பாபு, மாமன்ற உறுப்பினர்கள் மதிமுக அன்பு (எ) தர்மராஜ்,சாந்தாமணி பன்னீர்செல்வம்,சுமித்ரா தீபக், வட்டக்கழகச் செயலாளர்கள் சண்முகம், சுரேஷ்குமார், தி.இளங்கோவன், கே.ஆனந்தகுமார், இளைஞரணி துணை அமைப்பாளர்கள் லாரா பிரேம்தேவ்,க. மணிகண்டன், சி.எம். மசூது, மாணவரணி துணை அமைப்பாளர் தீபக், கிருஷ்ணசாமி, இடி முழக்கம் நடராஜ், ஆர்.கே. கே.மணி, போனஸ் பாபு,ஜெ.எஸ். ஆர்.ஜெயபால், தம்பு,கேசவன், சந்திரசேகர், கனகராஜ்,தம்பான், மதன்குமார், பிரின்ஸ், சுவிதா, ரவிச்சந்திரன், விஜயன், பகுதி கழக நிர்வாகிகள் இராஜேந்திரன், கீதா செல்வராஜ், இரமேஷ், சந்திரசேகர், எம்.அஸ்வின் பாலு, பி.யமுனாதேவி, ஆர்.ரங்கராஜ், எஸ்.சந்திரசேகர், ஆர்.விமலாதித்தன், ஆர்.பழனிச்சாமி,தமிழ் ராஜ்,எம். பழனிச்சாமி, ஆர்.ரவி, வடிவேல், சி.தேவராஜ், ஜே. ஜோசப், ராஜேஸ்வரி, ரேணுகா தேவி,ஆர். கே. கே.மணி, வி.எஸ்.கருப்புசாமி,

நாராயணசாமி, எஸ். துரைசாமி, பால கிருஷ்ணன், சின்னப்பன், எஸ். ஆர்.துரைசாமி, ராதாகிருஷ்ணன், பெருமாள், டெய்லர்ராஜ், சந்திரசேகர்,எத்திராஜ், சச்சிதானந்தம், பாலசுப்பிரமணியம் பழனிச்சாமி, செல்வராஜ் சுப்பிரமணியன் தங்கராஜ்,ஜோசப் பழனிச்சாமி, சுரேஷ்குமார், ராவணன், தங்கவேலு,முருகவேல் தமிழரசு, ராதாகிருஷ்ணன், மோகன்,ரவிச்சந்திரன் சண்முகம், மூர்த்தி, இஸ்ரவேல்,கதிரேசன் ராஜ்குமார், ஜெயராஜ் ராமசாமி, ஜவகர்,சிடிசி சண்முகம், ராஜாங்கம், மதியழகன், வாசுதேவன் கார்த்திக், பிரேம், செல்வராஜ், சத்தியசீலன், சசிகுமார் யோகேஷ்குமார், முருகேசன், கருணாகரன், சீனிவாசன்,தனபால் சிடிசி கார்த்திக், ராஜேந்திரன், மனோ கரன், தன்ராஜ் பன்னீர்செல்வம், ஆட்டோ மதிவாணன், தினகரன், ஜெகதீஸ்வரன், மகேந்திரன், இளங்கோவன், வெங்கடாசலம்,கழக மகளிர் அணி ராகவி, ஜெயலட்சுமி,சந்திரா, வாசுகி, எல்சியாபாய், பத்மாவதி,பானு, சந்தியா,

மீனாட்சி, வசந்தா,கிருத்திகா, மணி,அலமேலு, நிர்மலாதேவி, கலைச்செல்வி, வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள், கழக பாக முகவர்கள், கழக முன்னணி செயல் வீரர்கள்,கழகத் தொண்டர்கள், பொதுமக்கள் ஆயிரக் கணக்கில் கலந்து கொண்டனர்.

கூட்ட முடிவில், மாவட்டப் பிரதிநிதி மு.செல்வராஜ் நன்றியுரை கூறினார்.

# பத்திரிகையாளர்களுக்கு நிதி உதவி உண்டு; வீட்டுமனை வழங்கும் திட்டம் இல்லை!

## டாக்டர் கனிமொழி - என்.வி.என். சோமு கேள்விக்கு ஒன்றிய அரசு பதில்!

புதுடெல்லி, ஆக. 6-

நோய் மற்றும் விபத்து காரணமாக உயர்சிகிச்சை தேவைப்படும் அல்லது உயிரிழக்கும் பத்திரிகையாளர்கள் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு நிதி உதவி அளிக்கப்படுகிறதா? அங்கீகார அட்டை இல்லாத பத்திரிகையாளர்களுக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுமா? அவர்களுக்கு சலுகை விலையில் வீடோ வீட்டுமனையோ வழங்கும் திட்டமிருக்கிறதா? என்று மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி., டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி எழுப்பி இருந்தார்.

இதற்கு ஒன்றிய செய்தி ஒலிபரப்பு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக்தாக்கூர் அளித்த பதில்:

பெரும் நோய்களால் அவதிப்படும் பத்திரிகையாளர்களுக்கு உயர் சிகிச்சைக் காகவும், விபத்தால் உயிரிழப்புக்கோ, நிரந்தர முடக்கத்திற்கோ ஆளாகும் பத்திரிகையாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு ஒரு முறை நிவாரணமாகவும் நிதி உதவி பத்திரிகையாளர்களுக்கான நலத்திட்டத்தின் கீழ் வழங்கப் படுகிறது.



மத்திய மாநில அரசுகள் மூலம் அங்கீகார அட்டை பெற்ற பத்திரிகையாளர்கள் மட்டுமின்றி, அந்த அட்டை இல்லாத பத்திரிகையாளர்களுக்கும் இந்த நிதி உதவி வழங்கப்படுகிறது.

பத்திரிகையாளர்களுக்கு வீட்டு மனையோ, சலுகை விலையிலான வீடுகளோ அளிக்கும் திட்டம் எதுவும் ஒன்றிய அரசிடம் இல்லை. பத்திரிகையாளர்களுக்கு பென்ஷன் வழங்கும் விஷயம் என்பது அவர்கள் பணிபுரியும் நிறுவனத்தின் நடைமுறைகளுக்கு உட்பட்டது. இதில் அரசுக்கு எந்தத் தொடர்பும் இல்லை.

இவ்வாறு அனுராக்தாக்கூர் பதிலளித்தார்.